மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *அதாவது அரசு மூலமாக உயர் அதிகாரிகளிடம் சொல்லி, அதற்குரிய வேலைகள் செய்ய ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

22—

பகுதி நேர நியாய விலைக் கடை

***76—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, கல்லுவிளையில் வெள்ளிகோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் மூலமாகப் பகுதி நேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்திலுள்ள வெள்ளிகோடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் முளகுமூடு நியாய விலைக் கடையிலிருந்து கல்லுவிளை பகுதியிலுள்ள 100 குடும்ப அட்டைகள் மற்றும் கூவிமாவிளை பகுதியிலுள்ள 98 குடும்ப அட்டைகளைப் பிரித்து, 198 குடும்ப அட்டைகளுடன் கல்லுவிளையில் புதிய பகுதி நேர நியாய விலைக் கடை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, (மேசையைத் தட்டும் ஒலி) 12–7–2016 முதல் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 4]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லுவிளை பகுதியிலே பகுதி நேர கடையைத் திறந்தமைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கப்பியறை புதுக்காடுவெட்டி கூட்டுறவு பண்டகசாலை 187 கடையிலிருந்து ஒரு பகுதி நேர கடை மானாமலை பகுதியிலும், ஓலவிளை ARS 005 கடையிலிருந்து கப்பியறை, வயக்கரை பகுதிக்கு ஒரு பகுதி நேர கடையும், ரீத்தாபுரம் பனவிளை கூட்டுறவு பண்டகசாலை y 288 கடையிலிருந்து ரீத்தாபுரம், சலேத் நகர் பகுதியில் ஒரு பகுதி நேர கடையும் அமைக்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், வாடகைக் கட்டடத்தில் இருக்கக்கூடிய CTO 21 வெள்ளிகோடு கடையை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள கட்டடத்திற்கும், கோடியூர் KVTCM S OC 7010 கடையை அரசுக் கட்டடத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடத்திற்கு மாற்ற வேண்டியும் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் ஏற்கெனவே கேட்டிருக்கிறீர்கள். இன்றைக்கு அந்தக் கடையை நீங்களே சென்று திறந்து வைத்திருக்கிறீர்கள். அதற்கு முதலிலே நீங்கள் நன்றி சொன்னீர்களா? மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றாகவே நன்றியைச் சொல்லலாமே? திரும்பவும் எத்தனை கோரிக்கைகளை வைக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் கூட்டுறவு விதிகளுக்குட்பட்டு வரும்பட்சத்தில், அவற்றை நிறைவேற்றுவதற்கு அரசுத் துறை சார்பாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

முற்பகல் 10-15

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 1,000 குடும்ப அட்டைகள் உள்ள பெரிய கடையிலிருந்து 150, 120 என்று பிரிக்கிறீர்கள். அந்தப் பெரிய கடைகளில் பணி செய்யக்கூடிய பணியாளர்கள் அந்தப் பணிகளைவிட்டு, சிறிய கடையில், இந்தப் பகுதி நேர கடையில், வந்து பணியாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால், அந்தப் பகுதி மக்களுக்குப் பெரிய கஷ்டம் ஏற்படும். தினந்தோறும் பொருட்களை வாங்க முடியாத நிலை ஏற்படும். அங்கேயும் பிரச்சினை, இங்கேயும் பிரச்சினை. ஆகவே, பகுதி நேர மற்றும் முழு நேரக் கடைகளில் அதற்குரிய பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா? மக்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நல்ல முடிவை எடுப்பீர்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக கூட்டுறவுச் சங்கங்கள் என்பது குறைந்த நிதி ஆதாரத்தைப்பெற்று, குறைந்த நிதியோடு செயல்படுகின்றன. இன்றைக்கு பொது விநியோகக் கடைகள், அரசாங்கம் கொடுக்கின்ற அந்தப் பொருட்களைத் தங்குதடையின்றி, கிராமப்புறங்கள், நகர்ப்புறங்கள், மலைப் பகுதிகளில் இருக்கிற மக்களுக்கு விநியோகம் செய்து வருகின்றன. இதைச் செய்து வருகிற சங்கங்களுக்கு வலுவான நிதி ஆதாரம் கிடையாது. மக்களுடைய நிதி, கடன் வாங்கி அந்தச் சங்கங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் கூடுதலாகச் சொல்லவேண்டுமானால், ஒரு கூட்டுறவுக் கடையில், குறைந்தபட்சம், கிராமப்புறங்களில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பிரிக்க உத்தேசிக்கப்பட்ட கடையில், 150 கார்டுகள் இருக்க வேண்டும்; இரு கடைகளுக்கிடையே ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். 150 கார்டுகள் பிரித்த பிறகு, தாய்க் கடையில் 500 கார்டுகள் இருக்க வேண்டும். ஒரு பகுதி நேர கடையை அமைக்கும்பட்சத்தில் அந்த ஊர் மக்களே அதற்கான செலவுகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். கடைக்கான இடத்தை இலவசமாகக் கொடுக்க வேண்டும். இதுபோன்ற விதிகளெல்லாம் இருக்கின்றன. காரணம் என்னவென்றால், இதற்கு*

2016 ஆகஸ்ட் 4]

நிறைய செலவாகும். அதனால்தான், ஒரு தாய்க் கடையினுடைய பணியாளரே வந்து பகுதி நேர கடையையும் பார்க்கின்றார். தாய்க் கடை மூன்று நாட்கள், பகுதி நேரக் கடை மூன்று நாட்கள் திறப்பதற்கு ஏற்கெனவே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கூடுமானவரையில், மேற்கொண்டு சங்கத்திற்கு அதிக பணிச் சுமையில்லாமல் இருக்கும்பட்சத்தில், இன்னொரு கடையையும் சேர்த்து இரண்டு கடைகள் அமைக்கலாம். ஆகவே, வாரத்திலே இரண்டு, இரண்டு நாட்கள்தான் கடைகள் திறக்கப்படும். இதற்கே, கூடுதலான, அதிகப் பணியாளர்கள் என்ற நிலையில், நிதி அதிகமாகச் செலவிடப்படுகிறது. இந்திய வரலாற்றில் எந்தவொரு முதலமைச்சரும் 1 கோடியே 91 இலட்சம் குடும்பங்களுக்கு, குடும்ப அட்டைதாரர்களுக்கு, விலையில்லாத அரிசி வழங்கவில்லை. எங்கேயும், எந்த மாநிலத்திலும் வழங்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்ல வேண்டுமானால், இன்றைக்கு வெளி மார்க்கெட்டில் ஒரு கிலோ துவரம் பருப்பு 172 ரூபாய்; ஆனால், பொது விநியோகத் திட்டக் கடையில் இன்றைக்கு 30 ரூபாய்க்கு வழங்குகிறார்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். அதேமாதிரி உளுந்தம் பருப்பு. (குறுக்கீடு) இது கேள்வி நேரமாகும். இது கேள்வி நேரம் என்பதால், நான் சொல்கிறேன். உளுந்தம் பருப்பு ஒரு கிலோ 30 ரூபாய்க்கு வழங்குகிறார்கள். இதுமாதிரி ஒரு திட்டம், இந்தியாவில் எந்த முதலமைச்சராவது (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) உங்கள் காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களாக இருந்தாலும் சரி, எந்த மாநிலத்திலாவது கொடுக்கிறார்கள் என்று சொன்னால், நீங்கள் என்ன சொன்னாலும் ஏற்றுக்கொள்ளலாம்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்திற்காக ஆண்டுக்கு 5,600 கோடி ரூபாய் நிதி ஒதுக்குகிறார்கள். ஆகையால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இன்றைக்கு நியாயமாக என்ன செய்ய வேண்டுமோ, அரசாங்கம் தடையில்லாமல் மக்களுக்கு குறைவில்லாமல் செய்துகொண்டிருக்கிறது. ஏதாவதொரு சங்கத்தில் குறைபாடு இருக்கிறதென்றால், அதைச் சொல்லுங்கள். இன்னும்கூட, கடைகள் பிரிக்கப்படாத இடங்களில் நகரும் கடைகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடங்கியுள்ளது. இன்றைக்கு 36 நகரும் கடைகள் தமிழகத்தில் செயல்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு அம்மா, இதய தெய்வம், கருணைத் தாய், புரட்சித் தலைவி, அன்னபூரணி அவர்களுடைய

ஆட்சியில்தான் இன்றைக்கு அனைத்து மக்களும் (மேசையைத் தட்டும் ஒலி) பசியாற உண்ணுகின்றனர்; பசியில்லாமல் வாழ்கின்றனர்; பசி என்ற வார்த்தையையே தாய் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் தமிழ் அகராதியிலிருந்தே, தமிழகத்திலிருந்தே அப்புறப்படுத்தியிருக்கின்றார்கள்; அந்தச் சாதனை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். பாலசுப்பிரமணி அவர்கள்.*

திரு. ஆர். பாலசுப்பிரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். சாதாரண தொண்டனாகிய என்னை வட்டச் செயலாளராகவும், மாவட்ட அம்மா பேரவைச் செயலாளராகவும், ஆம்பூர் நகரமன்றத் தலைவராகவும், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆக்கி, அழகு பார்க்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் நாக்குனேரி ஊராட்சியில் மலைவாழ் மக்களுக்காக பகுதி நேர அங்காடி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒரு கடைக்கும் மற்றொரு கடைக்கும் இடையே 5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அதற்குண்டான கட்டடமும் கட்டப்பட்டுள்ளது. மலைப் பகுதி என்றால் 100 ரேஷன் கார்டுகள் இருந்தாலே போதும் என்ற விதிகளுக்கு மேலாக 135 கார்டுகள் உள்ளன என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார். குறிப்பாக, 100 கார்டுகள் இருந்தால் போதும். இன்றைக்கு கார்டுகள் கூடுதலாக இருக்கின்றன. இடைப்பட்ட தூரம் 4 கிலோ மீட்டர்*

2016 ஆகஸ்ட் 4]

இருக்க வேண்டும். அதுவும் பொருந்துவதாக இருக்கிறது. பிரித்த பிறகு தாய்க் கடையில் 400 கார்டுகள் இருக்கின்றன. அது எந்த ஏரியாவில் இருக்கிறது? அங்கே எப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிறது என்பதை துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.*

திரு. வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களையும், தமிழ்நாடு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் அருமை அண்ணன் தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.*

கடலூர் மாவட்டம், திட்டக்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒரங்கூர் ஊராட்சிக்கு அருகில் உள்ள ராயர்பாளையம் கிராமத்தில் நியாய விலைக் கடைக் கட்டடம் கட்டப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக திறக்கப்படாமல் இருக்கிறது. இதனால் அங்கு இருக்கக்கூடிய பொதுமக்கள் 2 கிலோ மீட்டர் தூரம் சென்று நியாய விலைக் கடையில் பொருட்களை வாங்க வேண்டிய ஒரு கட்டாயம் இருப்பதால், இந்தக் கடை உடனடியாகத் திறக்கப்படுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இரண்டு ஆண்டுகளாக புதிய நியாய விலைக் கடைக் கட்டடம் கட்டப்பட்டு திறக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். விதிகளுக்குட்பட்டு கடை கட்டப்பட்டிருந்தால், எந்தக் கடையும் திறக்கப்படாமல் இருந்தது கிடையாது. ஒன்று, அந்த ஊராட்சியில் எதிர்ப்புத் தெரிவித்திருக்க வேண்டும்; இல்லையென்றால் மின்சார இணைப்பு பெறாமல் இருக்க வேண்டும். ஏதோவொரு சட்டச் சிக்கல் இருக்கின்ற காரணத்தினால்தான் நியாய விலைக் கடை திறக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் எந்தக்*

கடையும், எந்தக் கட்டடங்களும், அதிலும் குறிப்பாக நியாய விலைக் கடைகள் திறக்கப்படாமல் இருந்ததில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருப்பதை, துறை ரீதியாக ஆய்வு செய்து, அப்படி இருக்கும்பட்சத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. வரலட்சுமி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை

***1405 திருமதி ம. வரலட்சுமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்புத் தாயாய், அறிவு ஜீவியாய், அஞ்சாத நெஞ்சமாய், அரசியல் சிங்கமாய், இயக்கத்தின் சங்க நாதமாகத் திகழும் தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய முதற்கண் வணக்கம்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தொகுதி, மறைமலை நகர் நகராட்சியில், '3 மருத்துவர் வகை' (Three Doctor Type) *தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. இம்மருந்தகத்தில், தற்போது 19,497 காப்பீட்டாளர்கள்*